முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1216

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

27.01.2023, வெள்ளிக்கிழமை

1. பரபிரம்ம சதாசிவ சற்குருவே
   பரமானந்த சிவராஜ யோகியே
   சரவணச் சுடரேற்றி அருளுகின்ற
   சற்குருவே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் தை மாதம் 13 ம் நாள் 27.01.2023, வெள்ளிக்கிழமை)
   வரமென அரங்கன் சன்மார்க்கமே வையகத்தை காத்து அருள்புரியக்கூடும்
   தரமான அரங்கனின் தர்மமே தரணியில் பசிபிணி விரட்டி உயிர் பாதுகாப்பு தரும்
3. தருகவே அரங்கன் தரும் ஞானம்
   தரணிக்கு ஞான ஆட்சியை உருவாக்கும்
   பெருமைமிக்க அரங்கன் தொண்டர் படையே
   பேருலகை மாற்றி அமைக்கக்கூடும்
4. கூடவே அற்புதத்தை தாங்கி
   குறையிலா ஓங்காரக்குடிலும்
   ஈடேற்றம் ஞானமாக உலகமெங்கும்
   இனிதே கிளைகளை இயக்கிவர
5. வருகவே அரங்கன் நாமம் சொல்லும்
   வல்லமைமிக்க தர்மசாலை எல்லாம்
   முருகப்பெருமான் என் அருள்பெறுவதோடு
   முழுமைபெற்று ஞானிகளை உருவாக்கி இனிதே
6. இனிதே உலகமெங்கும் ஞானவான்கள் படை
   இந்த உலகத்தையே மாற்றும் சக்தியாக மாறும்
   மாறியே அற்புதம் உலகில்
   மகத்துவம்பட அரங்கனால் நடந்தேறும்
7. ஆறுதலும் ஆற்றலும் தேறுதலும் பெற
   அகிலத்தார் அரங்கனை நோக்கி வரவேண்டும்
   வேண்டிவேண்டி அரங்கன் திருவடிபற்றி விடாது தர்மத்தை தொடர்ந்து செய்தால்
   தொண்டு வழியும் அரங்கன் ஆசி வழியும் தெய்வநெறி கூடி உலகோர் ஞானிகளாக மாறுவர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–